# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010
## HELD IN DECEMBER - 2010

## PSC 3.21 – ISSUES IN POLITICS OF SRI LANKA

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. இலங்கையில் இன முரண்பாடு வளர்ச்சியடைவதற்கு பங்களிப்புச் செய்த பின்வரும் காரணிகளை நீர் கற்றறிந்த யாதாயினும் முரண்பாட்டுக் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(அ) பொருளாதாரக் காரணிகள்

(ஆ) அரசியல் காரணிகள் (2 x 10 = 20 புள்ளிகள்)

02. "கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் மீறப்பட்ட ஒப்பந்தங்களுமே இன முரண்பாட்டினை கூர்மையடையச் செய்தன." இக்கூற்றினை கீழ்வரும் தலைப்புக்களின் கீழ் ஆராய்க.

(அ) பண்டா – செல்வா ஒப்பந்தம்

(ஆ) இலங்கை இந்திய ஒப்பந்தமும் மாகாணசபை முறையும்

(2 x 10 = 20 புள்ளிகள்)

03. சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் அரசியல் போக்கில் பின்வருவனவற்றின் செல்வாக்குக் குறித்து மதிப்பிடுக.

(ஆ) சாதி – குடும்பம் (Cast – Family)

(ஆ) மதம் - மொழி (Religion – Language)

(2 x 10 = 20 புள்ளிகள்)

04. இலங்கை அரசியலில் பெண்களின் முன்னேற்றத்துக்கு தடையாகவுள்ள பின்வரும் காரணிகளின் நிலை குறித்தும் இவற்றைத் தடுக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்குக.

(அ) அரசியல் ரீதியான காரணங்கள்

(ஆ) சமூக மற்றும் பொருளாதார ரீதியான காரணங்கள்

(2 x 10 = 20 புள்ளிகள்)

05. போருக்குப் பின்னரான (Post-war) இலங்கையின் அரசியல் இயங்கு நிலை (Dynamic) குறித்து ஒரு விமர்சனக் கட்டுரை வரைக.

(20 புள்ளிகள்)

06. யுத்தத்துக்குப் பின்னர் இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புதல் (Post war peace building) தொடர்பாக பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

(அ) எதிர்நோக்கும் சவால்கள்

(ஆ) தீர்வுகாணப்படும் வழிமுறைகள்

(2 x 10 = 20 புள்ளிகள்)

07. இலங்கையின் தொழிற்சங்கங்களின் தற்கால இயங்குநிலை பற்றி ஒரு நுணுக்கக் கட்டுரை வரைக.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பெழுதுக.

(அ) அரசியல் அமைப்புக்கான 17வது மற்றும் 18வது திருத்தங்கள்

(ஆ) இலங்கையில் அண்மைக்கால பல்கலைக்கழக மாணவர் போராட்டம்

(இ) படிப்பினைகள் மற்றும் நல்லிணக்க சனாதிபதி ஆணைக்குழு

(ஈ) இலங்கையில் தமிழ் முஸ்லிம் உறவுகள்

(2 x 10 = 20 புள்ளிகள்)

***